1987 மார்ச் 11]

திருச்சி—ஆலூர் நகரப் பேருந்து.

115—(*வினா எண். 10384) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-விராலிமலை ஒன்றியம், திருச்சியி லிருந்து ஆலூர் வரை நகரப்பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆலூருக்கு நகரப் பேருந்து ஒன்றை 8 நடைகள் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் 28—2—1986 முதல் இயக்கி வருகிறது.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரப் பேருந்து விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த திருச்சி புதுக்கோட்டை சாலையிலே, மாத்தூர் முதல் ஆலூர் செல்கின்ற சாலையைச் சுற்றி பல புதிய தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே தார்ச் சாலையாக மாற்றித் தர முன்வருவாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகள் வருகின்றன என்று சொன்னார்கள். இன்னும் வரவில்லை. அவை வருகிறபோது இதுவும் வரும்.

கால்நடை விரிவாக்க அலுவலர்கள்.

116—(*வினா எண். 5000) திரு. ச. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (I.R.D.P.) வழங்கப்படும் கால்நடைகளுக்கு சிகிச்சைகள் செய்யவும் பின்தொடர் பணிகளுக்காகவும் (Follow up) கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கு மருந்துகள் வழங்க அரசு நட வடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கால்நடை விரிவாக்க பணியாளர்களுக்கு வேண்டிய மருந்துகளுக்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. எனினும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கால்நடைகள் நோய்வாய்ப்படும்போது அவைகளுக்கு தகுந்த சிகிச்சை செய்யவும், வேண்டிய மருந்துகளை அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் கால்நடை விரிவாக்கப் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருச்சியிலிருந்து ஆலூர் வரை நகரப் பேருந்து விடப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஆலூரிலிருந்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்கு வந்தாகி விட்டது.

திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்பனிடல்.

117—(*வினா எண் 9562) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையை செப்பனிட்டு கரையோரங்களிலுள்ள நீராழி மண்டபங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) வேலைகள் எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சரவணப் பொய்கையை செப்பனிட்டு கரையோரங்களிலுள்ள நீராழி மண்டபங்களை புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விகளுக்கு இடமில்லை.